**சிரம வாசனா நிதியம் - 2019**

------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிரம வாசனா நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியத்தின் அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சிரம வாசனா நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின்நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம்செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நிதியமானது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- நிதியத்தின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அலதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 53 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டில் சொத்துக்களின் மீள் மதிப்பீடு செய்வதால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 306,348 மீள்மதிப்பீட்டு நட்டம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், அவ்வாறு குறிப்பிடாமையால், முன்னைய ஆண்டு மாற்றங்களாக திரட்டு | மீள் மதிப்பீட்டு நட்டத்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கிற்கு எதிராக எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கும் நடைமுறையாண்டு வருமானக் கூற்றிலிருந்து மீதியை கழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள்மதிப்பீடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தால் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன. வருடாந்த மிகையானது அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. அதனால், மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 430,420 கிரயமான நிலையான சொத்துக்கள் நடைமுறையிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இன் வருடாந்த கணக்கெடுப்பு சபையில் சொத்துக்களானது மீள் மதிப்பிடப்பட வேண்டுமென் தீர்மானித்த பின்னர் சொத்துக்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது சொத்துக்களின் அனைத்து வகைகளும் மீள்மதிப்பிட்டமையானது அனைத்து தொடர்புடைய சொத்துக்களின் மீள் மதிப்பீடானது பெறுமானத்தேய்வு பூர்த்தியடைய முன்னர் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதியமானதும் பெறுமானத் தேய்வினை பூர்த்தி செய்த பின்னர் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | தொழில், வியாபார உறவுகள் மற்றும் திறன்கள்துறை அபிவிருத்தி அமைச்சினால் நிதியத்திற்கு ரூபா 3,500,000 பெறுமதியான மோட்டார் வாகனம் மாற்றப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்தால் நிதியத்தில் உரித்தாக்கப்பட்ட ரூபா 125,500 பெறுமதியான மரத்தளபாடம் மற்றும் உபகரணம் போன்றன மூலதன மிகைகளாக இனங்காணப்படுவதற்கு பதிலாக முன்னைய ஆண்டு சீராக்கங்களாக திரட்டு இலாபத்திற்கு | முன்னைய ஆண்டு சீராக்கங்களை மேற்கொள்கையில் தொழில் அமைச்சால் மாற்றப்பட்ட ரூபா 35,000,000 பெறுமதியான KO 7519 இலக்கமுடைய மோட்டார் வாகனத்தை எதிர்காலத்தில் அகற்றுவதற்கும் 2019 ஆம் ஆண்டில் மூலதனத்திலிருந்து தொழில் திணைக்களத்தால் நிதியத்தில் உரிமையாக்கப்பட்ட ரூபா 125,500 பெறுமதியான மரத்தளபாட மற்றும் உபகரணம் போன்றவற்றை அரச நன்கொடைகளாக தனிப்பட்ட கணக்கில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் | தற்போதுள்ள கணக்கீட்டு நடைமுறையின் பிரகாரம் உரித்தாக்கப்பட்ட சொத்துக்கள் முறையாக கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கஞ் செய்யப்பட்டிருந்தது. | ஒதுக்கங்களாக இறுதி மீதியில் பேணுவதற்கும் சொத்துக்களின் பெறுமானத்தேய்வுகளை அகற்றுவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள தொழிற்படு மூலதன சீராக்கங்களாகவுள்ள ரூபா 2,692,741 நிலையான வைப்புக்களின் பெறுமதியானது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு கொண்டுவரப்பட்ட மிகையால் கட்டுப்பாட்டு கணக்கை பேணுவதனூடாக ஆண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் கணக்கிடப்பட்டிருந்த மையாலும் தொழிற்படு மூலதனத்தின் கழிப்பனவு மற்றும் சேர்ப்பனவுகளின் கீழ் குறிப்பிடப்பட்ட நடைமுறை ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டில் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி கணக்குகளிற்கிடையிலும் நிலையானவைப்புக்களின் வட்டிகளின் ஆரம்ப மற்றும் இறுதிமீதிகளுக்கிடையிலான ரூபா 2,692,742.10 வித்தியாசம் காசுப்பாய்ச்சல் கூற்றிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றை சமப்படுத்துகையில் இது விளைவை ஏற்படுத்துகின்றமையால் மேற்கூறப்பட்ட தொகையானது தொழிற்படு மூலதனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களாக காசுப்பாய்ச்சல் கூற்று மிகைக்கு தொகை சேர்க்கப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் முடிந்தளவில் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டி | | | |
| (i) | வழிகாட்டி 7.9.9 | ரூபா 565,405 இற்கான 3 மேசை கணனிகளிற்கான பெறுகையில், அதிகுறைந்த விலைமனுவை சமர்ப்பித்த விலைமனுதாரரை நிராகரிப்பதற்கான தொழில்நுட்ப விடயங்களுடன் தொடர்புடைய விலைமனுதாரிடமிருந்து ஏற்று நிதியமானது வாய்மொழிமூல தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொண்டது. எனினும், வழிகாட்டிகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு விலைமனுதாரர்களிடமிருந்து எழுத்து மூலத்திலான தெளிவுபடுத்தல்களானது தேடப்பட்டிருக்கவில்லை. | மேசை கணனிகளின் பெறுயையில் விலைமனுக்களின் கடிதங்களானது 11 நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் விலை மனுக்களானது 04 நிறுவனங்களினால் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவற்றில் கணனிகளிற்கு ரூபா 124,500.00 ஆக அதிகுறைந்த விலையை நிறுவனம் சமர்ப்பித்திருந்தது. மேலும், ஏனைய அனைத்து நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களுடன் ஒப்பிடும் போது குறிப்பிட்ட நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களில் மாத்திரம் ரூபா 35,000 வித்தியாசமொன்று காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க சிரம வாசன நிதியத்தின் பெறுகை குழு மற்றும் பொது முகாமையாளரின் வாய்மொழி வழிகாட்டிகளிற்கிணங்க விடயத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர் தொலைபேசியில் சொல்லப்பட்ட நிறுவனத்திடமிருந்து தொழில்நுட்ப விதப்புரைகள் தொடர்பான மேலதிக | பெறுகைகளை மேற்கொள்ள அரச பெறுகை வழிகாட்டிகளில் குறிப்பிட்டவாறு அறிவுறுத்தல்களை நிதியமானது பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்ப குழுவிற்கு முன் விசாரணைகளை மேற்கொண்டது. ஆவணங்களைத் தயாரித்த அலுவலர் விலைமனுக்களை தயாரிக்கையில் அனைத்து விதப்புரைகளுடன் மதிப்புரைகளினையும் குறிப்பிட்டு அனுப்பியிருந்தபோதிலும் மைக்ரோ சொப்ட் ஒப்பிஸ் பொதி (லைப்ரைம்) Microsoft office package என பெயரிடப்பட்ட மென்பொருளிற்கான விலைமனுக்களில் சேர்க்கப்பட்டிருக்கவில்லையென குறிப்பிட்டு சொல்லப்பட்ட நிறுவனமானது பதிலளித்திருந்தது. | |
| (ii) | வழிகாட்டி 3.4.3(இ) | பொருட்களிற்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் இருந்த போதிலும், ரூபா 127,700 பெறுமதியிலான பொருட்களானது வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சிற்றுண்டிகளை உற்பத்தி செய்வதற்கும் எல்ஈடி மின்குமிழ்களிற்காகவும் விலைமனுக்களை கோருகையில் நிறுவனமானது உபகரணத்தின் உரிய பகுதிகளை வழங்கிவருகின்ற நிறுவனங்களானது மஞ்சள் பக்கங்களிலும் வானவில் பக்கங்களிலும் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. அதனால் அரச வியாபார (பொது) கூட்டுத்தாபனம் மற்றும் அதனுள் பதிவு செய்யப்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டது அமைச்சின் செயலாளர் நடமாடும் சேவை தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் ஒரு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவைகள் தொடர்பிலான அனைத்து அச்சிடல் நோக்கங்களை பெற்றுக் கொள்வதற்கு இது பொருத்தமானது என | பெறுகைகளை மேற்கொள்ள அரச பெறுகை வழிகாட்டிகளில் குறிப்பிட்டவாறு அறிவுறுத்தல்களை நிதியமானது பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்காக, வானவில் பக்கங்களில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அச்சிடல் தொடர்பான விலைமனுக்களை அமைச்சு கோரியிருந்தமையால் சிரம வாசனா நிதியமானது கைப்பட்டியல் (hand bills), போஸ்டர் (Posters) மற்றும் பனர்கள் (Banners) போன்றவை தொடர்பில் அதே நிறுவனத்திடமிருந்து விலைமனுக்கள் கோரியிருந்தது. | |
| (ஆ) | 2015 யூன் 17 இன் பீஈடி 03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | நிதியத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட நிறைவேற்று இயக்குனர் மற்றும் தலைவர்கள் இயக்குனர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு உரித்தற்றிருப்பதனால் அதற்கு முரணாக, தலைவர் ரூபா 42,000 தொகையை 2019 இல் 07 சபைக் கூட்டங்களில் பங்குபற்றியமைக்கான அமர்த்தல் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சின் முன்னைய செயலாளர் தற்போது ஓய்வில் சென்றிருந்ததுடன் அவர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதனாது நியாயமற்றது என இயக்குனர் சபை தீர்மானித்திருந்தது. எனினும் 2020 சனவரியிலிருந்து அமர்த்தல் படிகள் கோரப்பட்டிருக்கவில்லை. | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை நிதியமானது பின்பற்ற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 21,832,738 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 19,238,038 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 2,594,700 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. லொத்தர்களிடமிருந்தான வருமானம் ரூபா 10,004,734 ஆல் அதிகரித்தமை இதற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2019 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியத்தால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த ஏழு செயற்பாடுகளிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2.41 மில்லியன் ஒதுக்கப்பட்ட நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. சொல்லப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தன்மையால் சொல்லப்பட்ட யெற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லையென் பதுடன் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் நோக்கெல்லையில் குறைபாடுகள் போன்றவற்றை கருத்திற் கொள்ளாமல் முகாமைத்துவத்தால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தொடர்ச்சியாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2018/2019 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட செயன் முன்னேற்றங்களிற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான விண்ணப்ப படிவங்களை பெறாமையால் இதை அடைய முடிந்திருக்கவில்லை என இயக்குனர் சபை குறிப்பிட்டிருந்தது. அதனால் குழுவானது தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதனுடைய அறிக்கையானது செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், இது எதிர்காலத்தில் இயக்குனர் சபைக்கு அனுப்ப எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதியமானது ஒவ்வொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மருத்துவ உதவியை வழங்கும் போது நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையானது செயற்கை கைகால்களை வழங்குதல் மற்றும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட லொத்தர் விற்பனைகளின் அதிகரிப்பானது 85 ஆக இருந்ததுடன் அதற்கான மதிப்பிடப்பட்ட தொகையானது ரூபா 3.3 மில்லியனாகவிருந்தது. எனினும், அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் 15 மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் நடாத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1.3 மில்லியன் தொகை அதற்காக செலவழிக்கப்பட்டிருந்தது. அதனால், பௌதீக செயன்முன்னேற்றம் 17 சதவீதமாக இருந்த போதிலும், நிதிசார் செயலாற்றல் 39 சதவீதமாக இருந்தது. | இயக்குனர் சபையானது நேரத்திற்கு நேரம் 2018/2019 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றங்களிற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக விண்ணப்பங்களை பெறாமை தொடர்பாக சுருக்கி கூறப்பட்டதை அடைய முடிந்திருக்கவில்லை. அதனால், குழுவானது தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான அறிக்கையானது செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் இது எதிர்காலத்தில் இயக்குனர் சபைக்கு இது அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதியமானது ஒவ்வொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும். |